## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 2-8 - அணைவது
### (எம்பெருமானது மோக்ஷமளிக்கும் தன்மையை உலகத்தார்க்கு உபதேசித்தல்)

2864 * அணைவது அரவணை மேல் * பூம்பாவை ஆகம்
புணர்வது * இருவரவர் முதலும் தானே **
இணைவனாம் எப்பொருட்கும் வீடு முதலாம் *
புணைவன் * பிறவிக்கடல் நீந்துவார்க்கே 1

2865 நீந்தும் துயர்ப் பிறவி * உட்பட மற்று எவ்வெவையும் *
நீந்தும் துயரில்லா * வீடு முதலாம் **
பூந்தண் புனல் பொய்கை * யானை இடர் கடிந்த *
பூந்தண்துழாய் * என் தனி நாயகன் புணர்ப்பே 2

2866 புணர்க்கும் அயனாம் * அழிக்கும் அரனாம் *
புணர்த்த தன் உந்தியோடு * ஆகத்து மன்னி **
புணர்த்த திருவாகித் * தன் மார்வில் தான் சேர் *
புணர்ப்பன் பெரும் புணர்ப்பு * எங்கும் புலனே 3

2867 புலன் ஐந்துமேயும் * பொறி ஐந்து நீங்கி *
நலம் அந்தம் இல்லதோர் * நாடு புகுவீர் **
அலமந்து வீய * அசுரரைச்[1] செற்றான் *
பலமுந்து சீரில் * படிமின் ஓவாதே 4

2868 ஓவாத் துயர்ப் பிறவி * உட்பட மற்று எவ்வெவையும் *
மூவாத் தனி முதலாய் * மூவுலகும் காவலோன் **
மாவாகி ஆமையாய் * மீனாகி மானிடமாம் *
தேவாதி தேவ பெருமான் * என் தீர்த்தனே 5

2869 தீர்த்தன் உலகளந்த * சேவடிமேல் பூந்தாமம் *
சேர்த்தி அவையே * சிவன் முடிமேல் தான் கண்டு **
பார்த்தன் தெளிந்தொழிந்த * பைந்துழாயான் பெருமை *
பேர்த்தும் ஒருவரால் * பேசக் கிடந்ததே? 6

2870 கிடந்திருந்து நின்றளந்து * கேழலாய்க் கீழ் புக்கு
இடந்திடும் * தன்னுள் கரக்கும் உமிழும் **
தடம்பெருந்தோள் ஆரத்தழுவும் * பாரென்னும்
மடந்தையை * மால் செய்கின்ற மால் * ஆர் காண்பாரே? 7

2871 காண்பார் ஆர்? எம் ஈசன் * கண்ணனை என் காணுமாறு? *
ஊண் பேசில் எல்லா * உலகும் ஓர் துற்றாற்றா **

[1] அசுரைச்

சேண்பால வீடோ * உயிரோ மற்று எப்பொருட்கும் *
ஏண்பாலும் சோரான் * பரந்துளனாம் எங்குமே 8

2872 எங்கும் உளன் கண்ணன் என்ற * மகனைக் காய்ந்து *
இங்கு இல்லையால் என்று * இரணியன் தூண் புடைப்ப **
அங்கு அப்பொழுதே * அவன் வீயத் தோன்றிய * என்
சிங்கப்பிரான் பெருமை * ஆராயும் சீர்மைத்தே? 9

2873 சீர்மைகொள் வீடு * சுவர்க்க[2] நரகீறா *
ஈர்மைகொள் தேவர் * நடுவா மற்று எப்பொருட்கும் **
வேர் முதலாய் வித்தாய்ப் * பரந்து தனி நின்ற *
கார்முகில் போல் வண்ணன் * என் கண்ணனை நான் கண்டேனே 10

2874 * கண்தலங்கள் செய்ய * கருமேனி அம்மானை *
வண்டலம்பும் சோலை * வழுதி வளநாடன் **
பண்தலையில் சொன்ன தமிழ் * ஆயிரத்து இப்பத்தும் வல்லார் *
விண்தலையில் வீற்றிருந்து ஆள்வர் * எம்மாவீடே 11

**அடிவரவு:** அணைவது நீந்தும் புணர்க்கும் புலன் ஓவா தீர்த்தன்
கிடந்து காண்பார் எங்கும் சீர்மை கண்டலம் எம்மா

[2] சுவர்க்கம்